# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*********

முறையீட்டு மனு எண்: 256/2017/பேட
ஆணை நாள்: 10–09–2018

திரு. த.ஸ்ரீராம்,
த/பெ திரு தங்கவேல்,
எண்.13, அண்ணன்மார் நகர்,
மொடக்குறிச்சி அஞ்சல் – 638 105,
ஈரோடு மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். — எதிர் மனுதாரர்.

## ஆணை.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி, எண்.13, அண்ணன்மார்நகர் பகுதியினைச் சேர்ந்த திரு. த.ஸ்ரீராம், த/பெ திரு. தங்கவேல், என்பவரின் நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.12.2017ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.256/2017 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி, 15வது வார்டு, செலமகவுண்டன்பாளையம், காமராஜர் வீதியில் உள்ள கழிவு நீர்க் கால்வாய் பேரூராட்சி சொத்து பதிவேட்டில் உள்ளதாகவும், மேற்படி கால்வாயினை 25.08.2009 அன்று 100 மீட்டர் அளவுக்கு உடைத்து சேதப்படுத்தியுள்ளதாகவும், சேதப்படுத்தியவர்கள் விவரம் குறித்து தன்னால் 5 முறை மனுக்கள் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், மாறாக புதிய திட்ட அறிக்கை தயார் செய்து, கால்வாய் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இது குறித்து தவறான அறிக்கை சமர்ப்பித்த பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 22.12.2017 நாளிட்ட அறிவிப்பாணையின் அடிப்படையில், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 16.02.2018 நாளிட்ட

மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையில், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி வார்டு எண்.15, காமராஜர் வீதி, செலமகவுண்டன்பாளையம் பகுதியில் அமைந்துள்ள பேரூராட்சியின் கான்கிரீட் வடிகாலினை மண்கொண்டு நிரப்பி ஆக்கிரமிப்பு செய்துள்ளது தொடர்பாக, பேரூராட்சி செயல் அலுவலர், மற்றும் மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் ஆகியோரால் தல ஆய்வு மேற்கொண்டதாகவும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு கான்கிரீட் வடிகால் சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லையெனவும், வடிகாலில் மண்கொட்டி கழிவு நீர் செல்லாதவாறு மூடப்பட்டு இருந்ததை, அடைப்புகள் ஏதும் இல்லாமல் பேரூராட்சி துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு, தற்போது நல்ல முறையில் உள்ளதாகவும். மேலும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு 100 மீட்டர் அளவிற்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், முறையீட்டு மனுதாரருக்கும் அப்பகுதியில் வசிக்கும் சில நபர்களுக்குமிடையே தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக வடிகாலை சேதப்படுத்தியுள்ளதாகவும். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என வாரந்தோறும் மாவட்ட ஆட்சியரால் நடத்தப்படும் மக்கள் குறைதீர்க்கும் நாளில் புகார் மனு அளித்து வருவதாகவும், இதனால் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதி, மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியரால் 30.01.2018ல் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி, அதன் விவரத்தினை வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு அவர்களுக்கு வட்டாட்சியரின் கடித ந.க.எண்.5257/2017/அ.2/நாள்.30.01.2018ன் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளவாறு, அப்பகுதியில் பேரூராட்சி நிதி மூலம் புதியதாக வடிகால் அமைக்க நாளது தேதி வரை திட்ட மதிப்பீடு ஏதும் தயாரிக்கப்படவில்லை எனவும், மொடக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையின்போது முறையீட்டு மனுதாரர், தற்போதுள்ள வடிகாலினை கடந்து செல்ல மிகவும் சிரமமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டதைபடுத்து, செயல் அலுவலரால் மேற்படி வடிகால் மீது மேல்பாதை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்ததுடன், மேற்படி இடத்தில் முறையீட்டு மனுதாரர் நடந்து செல்ல ஆட்சேபணை ஏதும் இல்லை எனவும், வடிகால் மீது மேல்பாதை அமைக்கவும், ஏற்கனவே முறையீட்டு மனுதாரர் பயன்படுத்தி வந்த பாதையினை பயன்படுத்த பொதுமக்கள் அனைவரும் ஆட்சேபணை தெரிவித்து கூட்ட நடவடிக்கையில் கையொப்பமிட மறுத்து சென்று விட்டதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.05.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான தங்களது விள்க்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 13.06.2018அன்று இம்முறைமன்ற நடுவத்தின் முன் ஆஜராகத் தெரிவித்து மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்தில் 13.06.2018 ஆஜரான மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.க.டார்த்தி தனது வாக்குமூலத்தில், "......முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக ஏற்கனவே சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியரால் அமைதி கூட்டம் நடத்தப்பட்டதாகவும், அக்கூட்டத்தில் தான் கலந்து கொண்டதாகவும், அதில் கழிவு நீர் வாய்க்கால் அமைப்பதாக

கூறியிருந்ததாகவும், அதை நடைமுறைப்படுத்துவதில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை உள்ளதால் மேற்படி பணியினை தன்னால் முழுமையாக செய்ய இயலவில்லை என தெரிவித்துள்ளார். மேற்படி கிராமத்தினரை முறையீட்டு மனுதாரர் அதிகமாக திட்டிய காரணத்தினால், மேற்படி கிராமத்தினர் முறையீட்டு மனுதாரரை முழுமையாக எதிர்ப்பதாகவும், தன்னால் இது குறித்து பொதுமக்களிடம் விசாரணை நடத்தி என்ன செய்யலாம் என ஆலோசனை கேட்கப்பட்டதாகவும், கிராமத்தினர் முறையீட்டு மனுதாரர் அதிகம் பேசிவிட்ட காரணத்தினால், மீண்டும் முறையீட்டு மனுதாரர் வந்து தனது வீட்டிற்கு செல்ல படிக்கல் போட அனுமதிக்கவேண்டும் என கேட்கவேண்டும் என பொதுமக்கள் கூறியதாகவும், முறையீட்டு மனுதாரரின் வீட்டு காம்பவுண்டு சுவர் அரசு நத்தம் புறம்போக்கில் ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக வருவாய்த்துறையினரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும், பொதுமக்களிடம் முறையீட்டு மனுதாரர் முரண்பாடாக நடந்துகொள்வதால் நத்தம் புறம்போக்கு இடத்தினை உபயோகிக்க பொதுமக்கள் ஆட்சேபணை தெரிவித்ததாகவும், மேற்படி இடத்தில் புதிய கால்வாய் கட்டுவதற்கு எந்த மதிப்பீடும் பேரூராட்சியால் போடப்படவில்லை எனவும், புதிய கால்வாய் எதுவும் கட்டப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்படி கால்வாயில் தண்ணீர் ஓடாமல் தேங்கி இருப்பதற்கு முறையீட்டு மனுதாரரே ஒரு குழி அமைத்துள்ளதாகவும் அதனால் சுகாதார கேடு ஏற்படும் என்பதால் பேரூராட்சி மூலம் இதனை சுத்தம் செய்து வருவதாகவும், இதற்கென தனி ஆட்கள் நியமிக்கப்படவில்லையெனவும், செலவினம் ஏதும் தனியாக மேற்கொள்ளப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்து தனது 12.06.2018 நாளிட்ட கூடுதல் அறிக்கையினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள மொடக்குறிச்சி பேரூராட்சி, வார்டு எண்15 செலமகவுண்டன்பாளையம் பகுதியில், ஏற்கனவே செல்லும் வடிகால் [illegible] பழுதடைந்து கழிவு நீர் சாலைகளில் வெளியேறியும், வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் அருகில் கழிவுநீர் தேங்கி பொது சுகாதார கேடு ஏற்பட்டு வந்ததாலும், ஏற்கனவே உள்ள வடிகால் மிகவும் சிறியதாகவும், கழிவுநீர் வேகமாக வழிந்தோட இயலாத வகையில் பழுதுபட்டு இருந்ததாகவும், மேலும் அப்பகுதியில் கோவில் குடமுழுக்கு விழா நடைபெற்றபோது பொதுமக்களின் அதிகமான போக்குவரத்தாலும், அங்கு ஏற்பட்ட சகதியாலும் வடிகால் மிகவும் சிதிலமடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலை ஏற்பட்டதாகவும், குடமுழுக்கு விழாவிற்கு பொதுமக்கள் அதிகம் கூடுவதால் சுகாதார சீர்கேட்டினை தடுக்கும் பொருட்டு உடனடியாக மண்வடிகால் அமைக்கப்பட்டு கழிவுநீர் வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் கூறும் இடத்தினை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் ஆகியோரால் தல ஆய்வு மேற்கொண்டதாகவும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு கான்கீரிட் வடிகால் சேதம் ஏதும் ஏற்படவில்லையெனவும், கோவில் திருவிழாவில் பொதுமக்கள் போக்குவரத்தினால் பாதிப்பு அடைந்துள்ளதால் மேற்படி வடிகால் கழிவு நீர் உடனடியாக அகற்றும்பொருட்டு அரசு புறம்போக்கு நிலத்தில் மண் வடிகால் அமைத்து அதில் அடைப்புகள் ஏதும் இல்லாமல் பேரூராட்சி துப்புரவு பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டு தற்போது நல்ல முறையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறையீட்டு மனுதாரர் அந்த வடிகாலை ஏற்கனவே உள்ளவாறு சீரமைத்து கொடுக்க கேட்டுள்ளதின் அடிப்படையில், பழைய வடிகாலினை சீரமைக்க ஏற்படும் செலவினத்தினை விட

தற்போது கழிவு நீர் செல்லும் மண் வடிகாலினை கான்கிரீட் வடிகாலாக மாற்றும் செயலினை குறைவாகவே உள்ளதாகவும், மேலும் ஏற்கனவே உள்ள வடிகாலானது மிகவும் குறுகிய நிலையில் உள்ளதாலும் அதனை பெரியதாக கட்ட இயலாது என்பதால் மாற்று வழியில் கழிவு நீர் வெளியேற்றப்பட்டு வருவதாகவும், மண் வடிகால் செல்லும் பாதையானது ஆக புறம்போக்கு நிலம் எனவும், மண் வடிகால் செல்லும் பாதையானது முறையீட்டு மனுதாரர் வீட்டிற்கு அருகில் புறம்போக்கு நிலத்தில் செல்வதால் இவ்வழியே கான்கிரீட் வடிகால் அமைக்க முறையீட்டு மனுதாரர் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இப்பொருள் தொடர்பாக சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாவண்ணம் இருக்கும் பொருட்டு மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் அவர்களால், வட்டாட்சியர் அலுவலகத்தில் 30.1.2018 ஆம் தேதி நடத்தப்பட்ட அமைதி பேச்சுவார்த்தையில், அருகில் உள்ள பொது புறம்போக்கு இடத்தினை அனைவரும் பயன்படுத்தலாம் என தெரிவித்ததாகவும், முறையீட்டு மனுதாரின் வடிகாலின் மீது சிலாப் அமைத்து கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டதாகவும், மேற்படி பகுதியில் வடிகால் மீது சிலாப் கற்கள் அமைக்க முற்படும்போது அப்பகுதி பொதுமக்களால் மேற்படி புறம்போக்கு இடத்தினை அளந்து அத்துக்காட்டி கொடுத்தபின்னர்தான் சிலாப் கற்கள் அமைக்கவேண்டும் என தெரிவித்ததால் மேற்படி நடவடிக்கை கைவிடப்பட்டதாகவும், மொடக்குறிச்சி வட்டாட்சியரின் கடித –ந.க.எண்.5257/2017/அ.2/நாள்.30.05.2018 நாளிட்ட கடிதத்தில் பிரச்சினைக்குரிய இடம் அளந்து அத்துக்காட்டப்பட்டு மேற்படி இடத்தில் திரு.தயூரிராம் என்பவர் ஏசி ஷீட் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிக்கை அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியரால் அளிக்கப்பட்டுள்ள புகார் அறிக்கையின்படி முறையீட்டு மனுதாரர் பொது இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளது ஊர்ஜிதம் ஆவதால் மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றிக் கொடுக்கக் கேட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 497/2017 நாள். 31.05.2018ல் வார்டு எண்.15, செல்லப்பகவுண்டன்பாளையம் பகுதியில் ரீ.ச.எண்.1035/3, 1036/1 மற்றும் க.ச.எண்.623/5 ஆகிய புலங்களில் பொது இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்த இடத்தினை பொது பயன்பாட்டிற்கு அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தற்போது அப்பகுதியில் செல்லும் மண் வடிகாலினை கான்கிரீட் வடிகாலாக மாற்றும் பொருட்டு உதவிபொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தனி அலுவலர் அனுமதி பெற்று பேரூராட்சி நிதியில் பணி மேற்கொள்ளப்படும் எனவும் தனது அறிக்கையில் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

13.06.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு. தயூரிராம் தனது முறையீட்டு மனு தொடர்பாக “......தங்கள் பகுதியில் காமராஜர் வீதியில் மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக தனது வீட்டிற்கு முன்புறம் கால்வாய் செல்வதாகவும், தனது வீட்டிற்கும் அந்த கழிவு நீர் கால்வாய்க்கும் 100 மீட்டர் இடைவெளி உள்ளதாகவும் தனது வீட்டு முன்பு உள்ள விநாயகர் கோவில் பக்கமாக அருகில் உள்ள ஓடையில் கழிவு நீர் கலப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பகுதியில் குடியிருக்கும் 70 நபர்களில், 8 நபர்கள் மட்டும் மேற்படி கழிவுநீர் கால்வாய் மற்றும் பொதுவழித்தடத்தை தான் பயன்படுத்த ஆட்சேபணை தெரிவிப்பதாகவும், அதனடிப்படையில் தான் ஏற்கனவே மாவட்ட ஆட்சியருக்கு மக்கள் குறை தீர்க்கும் மனு அளித்ததின் அடிப்படையில் மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் இது குறித்து ஆட்சேபணை

தெரிவிக்கும் சம்பந்தப்பட்ட 8 நபர்களுடன் ஒரு சமாதானக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததாகவும் அந்த சமாதானக் கூட்டத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரும் வந்ததாகவும், அவர் கழிவுநீர் கல்வாய் பாதை அமைக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளார். மொடக்குறிச்சி பேரூராட்சி மூலம் பழைய கழிவு நீர்க் கால்வாய் அமைத்ததை சரி செய்யாமல் புதியதாக அமைப்பதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து வருவதாகவும், இதை நிறைவேற்றினால் பேரூராட்சிக்கு தேவையில்லாத நிதியிழப்பு ஏற்படுமெனவும், பழைய கால்வாய் ஆக்கிரமிப்பினை அகற்றி 100 மீட்டர் பழுது ஏற்பட்டுள்ளதை சீர் செய்வதற்கும் மேற்படி கால்வாயினை சேதப்படுத்திய நபர்கள் மீது பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க ஆணையிடுமாறும் கேட்டுக் கொள்வதாக தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரரின் நேரடி வாக்குமூலம், பேரூராட்சி செயல் அலுவலரின் கூடுதல் விளக்க அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது கூடுதல் அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு வடிகால் பகுதியில் சேதமடைந்துள்ள இடத்தில் ஆக்கிரமிப்புகளை வருவாய் வட்டாட்சியர் மூலம் அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு, கால்வாயை உரிய முறையில் செப்பனிட்டோ, அல்லது மாற்று ஏற்பாடுகளை உரிய முறையில் மேற்கொள்ளவோ தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.
–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்:
1.திரு. அ.ராம்.
த/பெ திரு. தங்கவேல்,
எண்.13, அண்ணன்மார் நகர்,
மொடக்குறிச்சி அஞ்சல்,
ஈரோடு மாவட்டம்–638 105.

2. செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு.